# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, தரமணி இரயில் நிலையம் அருகில், பெருங்குடி, சென்னை – 600 113

தொலைபேசி: 044 – 22439177 தொலைநகலி: 2461 7996




## இணையவழித் தேர்வுகள் பிப்ரவரி, 2022

## மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள்

பிப்ரவரி, 2022-க்கான விரிவான தேர்வு அட்டவணையானது பல்கலைக்கழகத்தின் www.tndalu.ac.in என்ற இணையதளத்தில் உள்ளது.


| பாடப் பிரிவுகள் | வினாத்தாள் பதிவிறக்கம் செய்தல் | தேர்வுக்கான நேரம் | விடைத்தாள்களை கதிர்படிம நகல் எடுத்து மென்நகலை பதிவேற்றம் செய்தல் | விடைத்தாள்களை (கடின நகல்) சமர்ப்பித்தல் / இடுகையிடுதல் |
|---|---|---|---|---|
| சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் பல்கலைகழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகள் | காலை அமர்வுக்கான தேர்வுகளுக்கு காலை 9.45 மணி முதல் வினாத்தாள் பல்கலைக்கழக இணையதளத்தில் கிடைக்கும். | கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நேரப்படி தேர்வுக்கான நேரம் | காலை அமர்வு தேர்வுக்கான விடைத்தாள்களை மாலை 3.30 மணிவரை பதிவேற்றம் செய்யலாம் | தேர்வு நடைபெற்ற அதே நாளில். |
| | மதியம் அமர்வுக்கான தேர்வுகளுக்கு பிற்பகல் 1.45 மணி முதல் வினாத்தாள் பல்கலைக்கழக இணையதளத்தில் கிடைக்கும். | கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நேரப்படி தேர்வுக்கான நேரம் | மதியம் அமர்வு தேர்வுக்கான விடைத்தாள்களை இரவு 7.30 மணிவரை பதிவேற்றம் செய்யலாம் | தேர்வு நடைபெற்ற அடுத்த நாளுக்குள். |

### மாணவர்கள் முன்னேற்பாடாக வைத்திருக்க வேண்டியவைகள்

1. வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்யவும் மற்றும் விடைத்தாள்களை பதிவேற்றம் செய்யவும் இணைய இணைப்புடன் கூடிய மேஜைக் கணிணி / மடிக்கணிணி / கைபேசி வைத்திருக்க வேண்டும்.
2. விடைத்தாளின் அனைத்து பக்கங்களையும் கதிர்படிம நகல் / புகைப்பட நகல் எடுத்த பக்கங்களை ஒரே pdf கோப்பில் மாற்றம் செய்ய **Adobe Scan Software** அல்லது ஏதாவது ஒரு **Scanning App** வைத்திருக்க வேண்டும்.

### நிலை 1: தேர்வுக்கு முன் வெற்று விடைத்தாள்களை தயார் செய்யும் முறை

1. மாணவர் பெயரளவு பட்டியலின்படி (Nominal Roll), பதிவு செய்த பாடத் தேர்வுகளுக்கு மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். மேலும், பதிவு செய்யப்படாத பாடங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
2. மாணவர்கள் படத்தில் காண்பித்துள்ளபடி, A4 தாளின் அனைத்து விளிம்புகளிலும் 2.5. செ.மீ. இடைவெளியில் கோடுகள் வரையப்பட வேண்டும்.



3. மாணவர்கள் பதிவுசெய்து எழுதத் தகுதியுள்ள தேர்வின் முன்-அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கம் (Pre-printed Bar-coded front sheet) பதிவு எண் மற்றும் பாடக்குறியீட்டுடன் அச்சிடப்பட்டுள்ளது. இதனை பல்கலைக்கழகத்தின் www.tndalu.ac.in என்ற இணையதளத்தில் உள்ளது.
4. மாணவர்கள் முன் அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கத்தை பதிவிறக்கம் செய்து, தேர்வுகள் தொடங்கும் முன் தயார் செய்து கொள்ள வேண்டும்.
5. மாணவர்கள் எழுதப்பட்ட விடைத்தாளின் முதல் பக்கமாக முன் அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கத்தை இணைக்க வேண்டும்; தவறினால் அவர்களின் விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.

6. முன் அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கத்தில் எந்தவிதமான சீர்கேடுகள் செய்து இருப்பின் அது ஆள்மாறாட்ட குற்றமாகும். மேலும், இச்செயல் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு மாணவர்கள் தேர்விற்கு தடை செய்யப்படுவார்கள்.
7. மாணவர்கள் தங்கள் பதிவு எண்ணை ஒவ்வொரு பக்கத்தின் மேல் வலது மூலையில் எழுத வேண்டும்.
8. மாணவர்கள் எழுதக்கூடிய பக்கங்களின் அதிகபட்ச எண்ணிக்கை 45-ஆகக் வரையறுக்கப்பட்டுள்ளது.

## நிலை 2: வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்தல்

1. வினாத்தாள் ஒவ்வொரு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக இணையவழித் தேர்வு போர்டல் இணைப்பில் கிடைக்கும்.
2. தங்களின் பொருத்தமான (respective regulation) வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்து பதிலளிப்பது மாணாக்கர்களின் பொறுப்பாகும். தவறான வினாத்தாளைத் தேர்ந்தெடுத்து பதிலளித்து விடைத்தாள்களைச் சமர்பித்தால் அத்தகைய விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
3. மாணவர்கள் வினாத்தாளை பதிவிறக்கம் செய்வதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட சட்டக் கல்லூரியின் தேர்வு ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொண்டு, தங்களது மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது கைபேசி வாயிலாகவோ பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும் மாணவர்களின் கோரிக்கை சரிபார்ப்புக்குப் பிறகே வழங்கப்படும்.

## நிலை 3: வினாத்தாளுக்கு விடையளிக்கும் முறை

1. தேர்வு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தேர்வுக்கான கால அளவு அமையும்.
2. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேர்வு எழுத கூடுதலாக ஒரு மணி நேரம் வழங்கப்படும்.
3. மாணவர்கள் தேர்வு எழுத நீலம் அல்லது கருப்பு மை கொண்ட பேனாவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
4. மாணவர்கள் விடைத்தாள்களில் பக்க எண்களைத் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
5. மாணவர்கள் பக்க விளிம்புப் பெட்டிக்குள் (page margin box) பதில்களை எழுத அறிவுறுத்தப்படுகிறார்கள்.
6. மாணவர்கள் விடைத்தாளில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது இருபது வரிகள் எழுத வேண்டும்.
7. மாணவர்கள் விடைத்தாள்களின் எந்தப் பகுதியிலும் தங்கள் பெயரை எழுதக்கூடாது.
8. மாணவர்கள் விடைத்தாள்களில் எந்த மேல்முறையீடு செய்யவோ அல்லது தேவையற்ற அடையாளக் குறியிடவோ கூடாது.
9. மாணவர்கள் விடைத்தாளின் இருபுறமும் எழுத வேண்டும்.
10. மேற்கண்ட நடைமுறைகளுக்கு இணங்காமல் விடைத்தாள்களை சமர்ப்பிக்கும் மாணவர்களின் விடைத்தாள்கள் சுருக்கமாக நிராகரிக்கப்படும்.

## நிலை 4: விடைத்தாள்களை சமர்ப்பிக்கும் முறை

1. **விடைத்தாள்கள் தெளிவாகத் தெரியும்படியும் மற்றும் படிக்கக்கூடிய வகையிலும் மென் நகல் எடுப்பதும் மற்றும் அதனை சீரிய முறையில் பதிவேற்றம் செய்வதும் மாணவர்களின் முழு பொறுப்பாகும். மேலும், அவ்வாறு தெளிவாக இல்லாத விடைத்தாள்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.**
2. மாணவர்கள் விடைத்தாளின் முதல் பக்கமாக முன் அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கத்தை இணைத்து, அடோப் கதிர்படிம மென்பொருள் (Adobe scan software) அல்லது வேறு ஏதேனும் கதிர்படிம மென்பொருள் (any scanning App) மூலம் விடைத்தாள்களை கதிர்படிம நகல் எடுக்க வேண்டும்.
3. மாணவர்கள் கதிர்படிம மென் நகல் / புகைப்படம் எடுத்த விடைத்தாள்களின் அனைத்து பக்கங்களையும் ஒரே **pdf** கோப்பாக மாற்ற வேண்டும். மேலும், தங்களின் பதிவெண் மற்றும் குறிப்பிட்ட பாடக் குறியீட்டுடன் கோப்பின் பெயரை பதிவு செய்ய வேண்டும்.
   எடுத்துக்காட்டாக: பதிவு எண்.311A0001 ஆகவும், பாடக் குறியீடு TJA ஆகவும் இருந்தால், கோப்பின் பெயர் 311A0001_TJA.pdf. ஆக பதிவு செய்யப்பட வேண்டும்.
4. விடைத்தாளின் **pdf** கோப்பை வெற்றிகரமாக உருவாக்கிய பிறகு, மாணவர்கள் பின்வரும் விவரங்களுடன் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.tndalu.ac.in) உள்ள இணையவழித் தேர்வு போர்டலில் குறிப்பிட்ட நேரத்திற்குள் விடைத்தாளின் **pdf** கோப்பை பதிவேற்றம் செய்ய வேண்டும்:
   (அ) பதிவு எண்
   (ஆ) பாடக் குறியீடு
   (இ) தேர்வு தேதி
   (ஈ) விடைத்தாள்களின் அசல் கடின நகலை சமர்ப்பிக்கும் கல்லூரியின் பெயரை குறிப்பிட வேண்டும்.

5. மாணவர்கள் குறிப்பிட்ட தேர்வு தேதியில் பதிவு செய்யப்பட்ட பாடத்திற்கான விடைத்தாள்களை மட்டுமே பதிவேற்றம் செய்ய முடியும்.
6. விடைத்தாள்கள் சமர்ப்பிக்கும் நேரம் கணினி அமைப்பால் தானாகவே பதிவு செய்யப்படும்.
7. மாணவர்கள் பதிவு செய்யப்படாத பாடங்களுக்குச் சமர்ப்பிக்கும் விடைதாள்கள் மற்றும் திட்டமிடப்பட்ட நேரத்திற்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது.
8. ஒரு விடைத்தாளின் அதிகபட்ச கோப்பின் அளவு 25 mb மட்டுமே ஆகும்.
9. மாணவர்கள் விடைத்தாளை பதிவேற்றம் செய்யும்முன் pdf கோப்பின் பக்க வரிசை எண் (page number) சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
10. விடைத்தாள்கள் pdf கோப்பு வடிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட பிறகு எந்தவிதமான மாற்றங்களையும் செய்ய முடியாது.
11. மாணவர்கள் விடைதாள்களின் மென் நகலை பதிவேற்றிய பிறகு, முன் அச்சிடப்பட்ட பார்-குறியீடு செய்யப்பட்ட முகப்புப் பக்கத்தில் (Pre-printed Bar-coded sheet) குறிப்பிட்டுள்ள இடத்தில் முறையாக staple செய்து புத்தக வடிவத்தில் கடின நகலை தயார் செய்து கொள்ள வேண்டும்.
12. மாணவர்கள் தினசரி தேர்வை முடித்த பிறகு, விடைத்தாள்களின் கடின நகலை கீழே உள்ள அறிவுறுத்தலின்படி, கூடுதல் தகவலில் கொடுக்கப்பட்டுள்ள கல்லூரி முகவரிக்கு நேரில்/தபால் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

   - தற்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் தங்களின் விடைத்தாள்களை தற்போது படிக்கும் கல்லூரியில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
   - படிப்பை முடித்த மாணவர்கள் (course completed students) விடைத்தாள்களை தாங்கள் கடைசியாக படித்த கல்லூரியிலோ அல்லது அருகில் உள்ள சட்டக் கல்லூரியிலோ சமர்ப்பிக்க வேண்டும்.

13. விடைத்தாள்களின் கடின நகலின் பதிவு கடின நகல் பெறப்படும் சட்டக் கல்லூரியால் பதிவு செய்யப்படும். தேர்வுக்கு பதிவு செய்யப்படாத பாடங்களின் (not registered subjects) விடைத்தாள்கள் மாணவர்கள் சமர்ப்பித்தால் அதனை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு பெறப்படும் விடைத்தாள் கடின நகல் அக்கல்லூரியால் பதிவு செய்யப்படும்.
14. மாணவர்கள் விடைத்தாளின் கடின நகல்களை தடிமனான உறையினுள் (A4 clothlined cover) வைத்து தங்களின் பதிவு எண், பாடக் குறியீடு, பாடத்தின் பெயர் மற்றும் தேர்வு தேதி ஆகியவற்றை உறையின் மேல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
15. இரு முறைகளிலும் சமர்ப்பிக்கப்பட்ட விடைத்தாள்கள் (அதாவது விடைத்தாளின் கடின நகல் மற்றும் மென் நகல்) மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.
16. மேற்கண்ட நடைமுறைகளுக்கு இணங்காமல் சமர்ப்பிக்கப்பட்ட விடைத்தாள்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்படும். மேலும், அது எந்த சூழ்நிலையிலும் பரிசீலிக்கப்படமாட்டாது.

## <u>நிலை 5: மாதிரித் தேர்வு</u>

1. இணையவழித் தேர்வு முறையின் நடைமுறையை மாணவர்கள் தெரிந்து கொள்வதற்கு மாதிரித் தேர்வு (Mock test) நடத்தப்படும்.
2. பின்வரும் அட்டவணையின்படி, மாதிரித் தேர்வுகள் பல்கலைக்கழக இணையதளம் (www.tndalu.ac.in) வாயிலாக நடத்தப்படும்.

   - **இளநிலை ஹானர்ஸ் சட்டப் படிப்புகள் (சீர்மிகு சட்டப் பள்ளி) :**
     - பிப்ரவர் 7, 2022, நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
   - **இளநிலை சட்டப் படிப்புகள் (இணைவு பெற்ற சட்டக் கல்லூரிகள்):**
     - பிப்ரவர் 7, 2022, நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
   - **முதுநிலை சட்டப் படிப்புகள் (சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் இணைவு பெற்ற சட்டக் கல்லூரிகள்):**
     - பிப்ரவர் 18, 2022, நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

3. மாதிரித் தேர்வுக்காக கொடுக்கப்பட்ட வினாத்தாள்கள் குறிகாட்டியாக மட்டுமே இருக்கும். மேலும் இது உண்மையான இணையவழித் தேர்வின் பதிப்பாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது.
4. மாணவர்கள் தேர்வு தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் இணையவழி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்லூரி ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளலாம்.

| மாணவர்கள் மேற்கண்ட நடைமுறைகள் / வழிகாட்டுதல்கள் / அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லையெனில் அவர்களின் தேர்வுகள் நிராகரிக்கப்படும். |
| --- |

## கூடுதல் தகவல்கள்

மாணவர்கள் தேர்வு தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும்/விசாரணைக்கும், விரைவான பதிலுக்காக பின்வரும் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையவழி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்லூரி ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளலாம். அலுவலக நேரம்: காலை 9.45 மணி முதல் இரவு 7.30 மணி வரை.

சீர்மிகு சட்டப் பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, தரமணி இரயில் நிலையம் அருகில், பெருங்குடி, சென்னை – 600 113.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, வரதாபுரம் கிராமம், பட்டறைபெரும்புதூர் அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் - 631 203.

முனைவர். சி. அனிதா பே.்.பியோலா,
உதவிப் பேராசிரியர் : 9787062116

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம், திருப்போரூர் தாலுக்கா, செங்கல்பட்டு – 603 103

முனைவர். வி. சியாம் சுந்தர்,
உதவிப் பேராசிரியர் : 7200048576

அரசு சட்டக் கல்லூரி, முனைவர் S.V.K.S. தங்கராஜ் சாலை, தல்லாக்குளம், மதுரை – 625 020

முனைவர். ஜே. ஜேம்ஸ் ஜெயபால்,
உதவிப் பேராசிரியர் : 9843136673

அரசு சட்டக் கல்லூரி, ரேஸ்கோர்ஸ் சாலை, காஜாமலை, திருச்சிராப்பள்ளி – 620 023

திருமதி. M. நிர்மலா, உதவிப் பேராசிரியர் : 9944687780

அரசு சட்டக் கல்லூரி, மருதமலை மெயின் ரோடு, கோயம்புத்தூர் – 641 046

முனைவர். இரா. குமுதா, உதவிப் பேராசிரியர் : 9940883582

அரசு சட்டக் கல்லூரி, திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 011

முனைவர். N. இராமபிரான் ரஞ்சித்சிங்,
உதவிப் பேராசிரியர் : 9788124707

அரசு சட்டக் கல்லூரி, N.G.G.O. நகர், திருமேனி சாலை, செங்கல்பட்டு – 603 001

திருமதி. சீ. கிருஷ்ணலீலா, உதவிப் பேராசிரியர் :9941386684

அரசு சட்டக் கல்லூரி, மேற்கு காந்தி நகர், காட்பாடி, வேலூர் – 632 006

திருமதி. ஷே. ரஷீதா, உதவிப் பேராசிரியர்: 9894912341

அரசு சட்டக் கல்லூரி, பாரதியார் தெரு, சென்னை சில்க்ஸ் எதிரில், சாலமேடு, வழுதாரெட்டி, விழுப்புரம் – 605 403

திரு. கு. இராமஜெயம்,
உதவிப் பேராசிரியர் : 9600958225/6380572269

அரசு சட்டக் கல்லூரி, NH – 44, பைசுஹள்ளி, மாட்லாம்பட்டி குறுக்கு சாலை, காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம் – 635 205

திருமதி. P. சாந்தகுமாரி,
உதவிப் பேராசிரியர் : 9715435105

அரசு சட்டக் கல்லூரி,
(பெருங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி புதிய கட்டிட வளாகம்)
பெருங்குளம் அஞ்சல், இராமநாதபுரம் – 623 536

திரு. R. மாணிக்கவிநாயகம்,
உதவிப் பேராசிரியர் : 9865611574

அரசு சட்டக் கல்லூரி, அரசு மேல்நிலைப் பள்ளி வளாகம், தெற்கு தாசில்தார் அலுவலகம் எதிரில், மணியனூர், சேலம் – 636 010

திரு. எம். பிரனவ் விஷ்ணு அர்ஜுன்,
உதவிப் பேராசிரியர் : 9688695241.்.7558191459

அரசு சட்டக் கல்லூரி, நெ.12, டான்சி ஷோரும் கட்டிடம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல் – 637 001

திருமதி. பா. பிரியா, உதவிப் பேராசிரியர் : 9788872287

அரசு சட்டக் கல்லூரி, 43/1A, தேனி – குமுளி தேசிய நெடுஞ்சாலை, ஸ்ரீ சந்திரகுப்த மௌரியர் சர்வதேச பள்ளி, உப்பர்பட்டி, தேனி – 625 534

திரு. J. பிரவின், உதவிப் பேராசிரியர் : 7200002333

மத்திய சட்டக் கல்லூரி (தனியார்), ஏற்காடு மெயின் ரோடு, கண்ணன்குறிச்சி அஞ்சல், சேலம் - 636 008

முனைவர் C. பாலராமலிங்கம்,
உதவிப் பேராசிரியர் : 8148903829

சரஸ்வதி சட்டக் கல்லூரி (தனியார்), ஒலக்கூர் அஞ்சல், திண்டிவனம் - 604 305

திரு. N. ஜானகிராமன்,
உதவிப் பேராசிரியர் : 9629943722

### இணையதள ஒருங்கிணைப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முனைவர் M.D. சின்னு, உதவிப் பேராசிரியர் | 7200508306 |
| 2. | திரு. S. மருதவிஜயன், உதவிப் பேராசிரியர் | 7200504871 |
| 3. | திரு. A. ஜே.்.ப்ரி ஆன்ட்ரிவ், உதவிப் பேராசிரியர் | 7200415273 |
| 4. | திரு. ராகுல் ரெகு, உதவிப் பேராசிரியர் | 8122103181 |
| 5. | முனைவர் M. நிர்மல் குமார், உதவிப் பேராசிரியர் | 8122103284 |
| 6. | முனைவர் S. திருமால், உதவிப் பேராசிரியர் | 8015102189 |

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்